Previous Date of examination : 03.11.2020

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2023-ம் ஆண்டு ஜூலை மாதம் 10 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 67 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகாலெட்சுமி | வயது | /2023 |
| தகப்பனார் பெயர் | | ஜாதி | |
| தொழில் | உதவி ஆய்வாளர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் நகர காவல் நிலையம். | தாலுக்கா | |

(1, 2 எதிரிகள் ஆஜர், .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

**(1)** நான் தற்போது திருவாரூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.04.2019 ம் தேதி நான் திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மதியம் 11.00 மணிக்கு திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நடப்பு மனு எண். G35208/2019 Date: 28.03.2019, மாவட்ட குற்றப்பிரிவு நடப்பு மனு எண். 108/டி.சி.பி. டி.பி.ஆர்/2019 நாள் 29.03.2019 மனுவினை ஆய்வாளர் உத்தரவுப்படி நான் மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண். 01/2019 சட்டப்பிரிவு 120(பி), 406, 420 இ.த.ச.-வாக வழக்கு பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படுவது என்னால் பதிவு செய்யப்பட்டவைதான். **( முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 1 முதல் 9 வரையான சாட்சிகளான சுரேஷ்,த/பெ. பக்கிரிசாமி, தாசன் த/பெ. பக்கிரிசாமி, அழகர் த/பெ.பக்கிரிசாமி , தர்மராஜ் த/பெ. பரமசிவம், சுரேஷ் த/பெ. ரவிச்சந்திரன், தினேஷ் த/பெ. சிவக்குமார், சக்திவேல் த/பெ. வெங்கடாஜலம், ராஜேந்திரன் த/பெ. நடேசன், முருகதாஸ் த/பெ. ஜகநாதன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**(2)** பின்னர் 08.04.2019 ம் தேதி இவ்வழக்கின் 1 வது எதிரியான சக்திவேல் என்பவரை அவரது வீட்டு வாசலில் வைத்து மதியம் 2.00 மணிக்கு குற்றக்காரணம் கூறி கைது

செய்து சாட்சிகள் ராஜேந்திரன், முருகதாஸ் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சக்திவேல் தன்னை வீட்டிற்கு அழைத்து சென்றால் சாட்சிகள் சுரேஷ், தினேஷ், தாசன், தர்மராஜ் , அழகர் மற்றும் மன்னார்குடி ரமேஷ் ஆகியோருக்கு தான் வேலை வாங்கி தருவதாக பணம் பெற்றுக்கொண்டதற்கு கொடுத்து கையெழுத்திட்டு கொடுத்து ரூ.20/- மதிப்புள்ள பத்திர நகல்களையும், 83 பேரிடம் பணம்பெற்ற விபரத்தையும் எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். ( **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**(3)** பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சக்திவேல் அவர் வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த 20/-ரூபாய் முத்திரை தாளில் எழுதப்பட்ட 6 ஆவணங்களின் நகல்கள் மற்றும் பணம் பெற்றுக்கொண்டதற்கான விபரங்கள்அடங்கிய நான்கு பக்கம் உள்ள கையால் எழுதப்பட்ட விபரத்தாளின் நகல் ஆகியவற்றை சாட்சிகள் ராஜேந்திரன், முருகதாஸ் ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் என்னால் தயார் செய்யப்பட்டதுதான். ( **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.19 ஆகவும், 20 ரூபாய் முத்திரைதாளில் எழுதப்பட்ட ஆறு ஆவணங்களின் நகல்கள் அ.சா.ஆ.20 முதல் அ.சா.ஆ.25 ஆகவும், கையால் எழுதப்பட்ட நான்கு பக்கங்களை கொண்ட விபரங்கள் அடங்கிய தாள்களின் நகல் அ.சா.ஆ.26 வரிசையாகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

(4) பின்னர் இவ்வழக்கின் 2வது எதிரி கோவிந்தலெட்சுமி என்பவரை 08.04.2019 ம் தேதி இரவு 7.00 மணிக்கு விளமல் பஸ் ஸ்டாப்பில் வைத்து குற்றக்காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் எதிரிகள் இருவரையும் நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

**(1)** இந்த வழக்கு சம்பந்தமாக தபால் மூலமாக எங்கள் காவல் பிரிவிற்கு புகார் எதுவும் வந்ததா? என்றால் இல்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் விஜிலன்ஸ் பிரிவில் இருந்து எங்களது காவல் பிரிவிற்கு என்னை ஆஜராக சொல்லி அறிவிப்பு எதுவும் வந்ததா? என்றால் இல்லை. எதிரி சக்திவேல்தான் உயர்நீதிமன்றத்தில் மனு செய்துள்ளதாக சொன்னார். எதன் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் வேலை வாங்கி தருவதாக சொல்லி ஏமாற்றியிருப்பது தெரியவந்ததால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

**(2)** நான் புகார் வந்தவுடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா

என்றால் புகாரானது 28.03.2019-ல் மாவட்ட காவல் காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அது நடப்பு தாளாக விசாரணை செய்யப்பட்டு பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 1வது எதிரியை கைது செய்வதற்கு முன்பாக ஆவணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. 1வது எதிரியை கைது செய்வதற்கு முன்பாக பணமோ, ஆவணமோ நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். 1வது எதிரியை கைது செய்வதற்கு முன்பாக நான் சர்ச் வாரண்ட் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். 1வது எதிரியின் வீட்டை சோதனை செய்ய சோதனை கட்டளை பெறாமல் ஏன் அவசரமாக சென்றேன் என்றால் நான் எதிரி வீட்டை சோதனை செய்யவில்லை, 1வது எதிரிதான் அழைத்து போய் ஆவணங்களை எடுத்து ஆஜர் செய்தார். நான் சொல்வது போல் 1வது எதிரி என்னை அழைத்து போய் ஆவணங்களை எடுத்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 1வது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் தரவில்லை என்றும், 1வது எதிரியிடம் மிரட்டி கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

(3) ஒப்புதல் வாக்குமூலமானது எங்களால் எங்களது விருப்பத்திற்கு ஏற்ப தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியிடம் கையெழுத்து வாங்கும்போது அவரது பெயர்,முகவரியை கேட்போமா என்றால் கேட்போம். ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் கையெழுத்து போட்ட இடத்தில் அவர்களது தகப்பனார் பெயர் மற்றும் முகவரி விபரம் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் 1 முதல் 9 சாட்சிகளை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 08.04.2019-ல் விசாரித்தேன். 1 முதல் 9 சாட்சிகளிடம் எழுத்து பூர்வமாக நான் எழுதி வாங்க வில்லை என்றால் சரிதான். வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 1 முதல் 9 சாட்சிகளை எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் 08.04.2019 ம் தேதி காலை 11.00 மணி முதல் மதியம் 2.00 மணிக்குள் விசாரித்தேன். 1வது எதிரியை கைது செய்த பின்னர் விசாரித்தேன். 1 முதல் 9 சாட்சிகளின் விபரம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் புகாரில் அவர்கள் ஏமாந்ததாக குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்தது.

(4) 1வது எதிரி வழக்கு புகாருக்கு முன்பாகவே, ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றும், அந்த புகாரை நாங்கள் மறைத்து பின்னிட்டு சுரேஷ் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1வது எதிரியால் 04.03.2019 ம் தேதி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அந்த புகார் எங்களால் மறைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. 2வது எதிரி நீதிமன்ற பணியில் இருந்துள்ள நிலையில் அவருக்கு காரணம் கேட்கும் அறிவிப்பு எதுவும் கொடுத்தோமா

என்றால் கைது செய்த பின்னர் அவர் பணிபுரிந்த அலுவலகத்திற்கு தகவல் கொடுத்தோம். 2 வது எதிரி மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதா என நான் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை. புகாரானது 28-03.2019 ம் தேதி பெறப்பட்டுள்ள நிலையில் 08.04.2019 ம் தேதி அவசரமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் முதல் விசாரணைக்கு பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 09.04.2019 ம் தேதியன்று எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற விஜிலன்ஸ் பிரிவில் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியிருந்த நிலையில் அவரை செல்லவிடாமல் தடுக்கும் நோக்கில் 1 வது எதிரியை கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றும், அவர் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு 09.04.2019 ம் தேதி சென்றிருந்தால் உண்மை நிலவரம் தெரியவந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

(5) 1 வது எதிரி 04.03.2019 ம் தேதி திருவாரூர் மாவட்ட கண்காணிப்பாளிடம் புகாரையும், 83 நபர்கள் பெயர்கள் அடங்கிய பட்டியலையும் கொடுத்துள்ளார் என்றும், 2 வது எதிரி மீது நடவடிக்கை எடுக்க 1 வது எதிரியால் புகார் கொடுக்கப்பட்டது என்றும், அந்த புகாருடன் 1 வது எதிரி கொடுத்திருந்த 83 நபர்கள் அடங்கிய பட்டியலை மட்டும் நாங்கள் தவறாக பயன்படுத்திக்கொண்டுள்ளோம் என்றும், நான் கைப்பற்றியதாக சொல்லும் 83 நபர்கள் பெயர்கள் அடங்கிய நான்கு பக்க விபரத்தாள் 1 வது எதிரி கொடுத்த புகாருடன் இணைக்கப்பட்ட ஆவணம் என்றும், நான் சொல்வது போல் அதனை நான் 1 வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டால் பல அரசு உயர்அதிகாரிகள் வழக்கில் குற்றவாளிகளாக வருவார்கள் என்பதால் அதனை நாங்கள் மறைத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

புகாரில் 2 வது எதிரி வேலை வாங்கி தருவதாக கூறியதாகவோ, 2 வது எதிரி பணம் பெற்றதாகவோ, 2 வது எதிரியை அடையாளப்படுத்தி புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. கோவிந்தலெட்சுமியிடம் போனில் பேசியதாகவும், கோவிந்தலெட்சுமி உரியவர்களிடம் பணத்தை கொடுத்துவிட்டதாக கோவிந்தலெட்சுமி சொன்னதாகவும் புகாரில் சொல்லப்பட்டுள்ளது. 1 முதல் 9 சாட்சிகள் சொன்ன விபரத்தைதான் நான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். 2 வது எதிரிக்கு எதிராக புகாரில் எவ்வித முகாந்திரமும் இல்லாத நிலையில் காவல் ஆய்வாளர் துர்க்கா

அவர்களின் ஆலோசனையின்படி இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் 2 வது எதிரியின் பெயரை சம்பந்தப்படுத்தி தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 முதல் 9 வரையான சாட்சிகள் 2 வது எதிரியை தொடர்புபடுத்தியோ, அடையாள படுத்தியோ வாக்குமூலம் தரவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை காலம் -8 ல் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது என்றால் சரிதான். 2 வது எதிரியை கைது செய்ததாக சொல்லும் விளமல் பஸ் ஸ்டாப் என்பது வணிக பகுதி என்றும், அங்கு போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி என்றும் சொன்னால் சரிதான். கைது குறிப்பாணையில் விளமல் பகுதியில் உள்ளவர்களிடம் கையெழுத்து வாங்கினேனா என்றால் 2 வது எதிரியின் மகனிடம் கையெழுத்து வாங்கினேன். நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் 2 வது எதிரியை கைது செய்யவில்லை என்றும், விசாரணை செய்ய வேண்டும் என அழைத்து மாவட்ட குற்றப்பிரிவில் வைத்து 2 வது எதிரியை கைது செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எந்த முகாந்திரமும் இல்லாததால்தான் நான் 2 வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம்பெறவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளார். நான் கைது செய்தபோது 2 வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். என் அறிவுறுத்தலின்பேரில் 2 வது எதிரியின் பெயர் புகாரில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/-எல்.ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.